## <u>கூடுதல் சார்பு நீதிமன்றம், செய்யாறு.</u>

## <u>O.S.No.250/2017</u>

| | |
|---|---|
| வாதி தரப்பு சாட்சி | **வா.சா. 1** |
| பெயர் | திருமதி. அபிலா பிஜின் எட்வர்டு |
| தந்தை பெயர் | திரு. எட்வர்டு |
| கிராமம் | ஆதம்பாக்கம் |
| வட்டம் | சென்னை |
| தொழில் | வியாபாரம் |
| வயது | 58 |

2025–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 18–ஆம் நாளன்று, திரு.M.விக்னேஷ் பிரபு, M.L., கூடுதல் சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் 1969–ஆம் ஆண்டு உறுதிமொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>முதல் விசாரணை</u> :**

1. நான் இந்த வழக்கில் 2–ம் வாதி ஆவேன். எனது தரப்பு எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தினை முதன்மை சாட்சியமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் ஆங்கிலத்தில் உள்ளது. எனக்கு ஆங்கலம் நன்கு தெரியும். அதனை நான் சொல்லிதான் எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. அதனை படித்து பார்த்து, வழக்கறிஞர் படித்து சொல்ல சரியென்று ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தேன். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்து குறியீடு செய்கிறேன்.

| வ.எண். | தேதி | ஆவணங்கள் |
|---|---|---|
| 1. | 29–11–1999 | தேதியிட்ட Western Express Private Limited பெயரில் உள்ள கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் – வா.சா.ஆ.1. |

| வ.எண். | தேதி | ஆவணங்கள் |
| --- | --- | --- |
| 2. | 04-08-2008 | தேதியிட்ட வாதியின் பெயரில் உள்ள கிரைய பத்திரத்தின் அசல் – வா.சா.ஆ.2. |
| 3. | 21-08-2017 | Debts Recovery Tribunal – 2, சென்னை வழங்கிய உத்தரவின் சான்றிட்ட நகல் – வா.சா.ஆ.3. |
| 4. | 29-03-2017 | 1-ம் வாதி 1-ம் பிரதிவாதிக்கு கொடுத்த கடிதத்தின் நகல் – வா.சா.ஆ.4. |
| 5. | 05-04-2017 | 1-ம் வாதி Western Express Private Limited க்கு கொடுத்த கடிதம் – நகல் – வா.சா.ஆ.5. |
| 6. | – | M.A.No. 92/2017 வழக்கில் 1-ம் வாதி தாக்கல் செய்த அபிடவிட் – வா.சா.ஆ.6. |
| 7. | 26-07-2017 | 1-ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிருரை – நகல் – வா.சா.ஆ.7. |
| 8. | 10-11-2017 | Debts Recovery Tribunal – 2 வழங்கிய e-Action Sale உத்தரவு – நகல் – வா.சா.ஆ.8. |
| 9. | – | எனது ஆதார் அட்டை – நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) – வா.சா.ஆ.9 |

எனவே, தாவாப்படி தீர்ப்பாக வேண்டி பிராத்திக்கிறேன்.

<u>குறுக்கு விசாரணை</u> :–

(1-ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்/– M. விக்னேஷ் பிரபு
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**